நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் திருமருகல் ஒன்றியம் பனங்குடி, கோபுராஜபுரம் மற்றும் நரிமணம் ஆகிய கிராமங்களில் சி.பி.சி.எல். மறுவாழ்வு மறுகுடியமர்வு கீழ் 60 பயனாளிகளுக்கு தலா ரூ. 5,00,000 வீதம் ரூ. 3,00,00,000 இழப்பீட்டுத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் பயனாளிகளுக்குபள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி காசோலை வழங்கினார். உடன் நாகை மாவட்ட ஆட்சி தலைவர் ப.ஆகாஷ் தலைமை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் முகம்மதுஷாநவாஸ், நாகைமாலி, மீனவர் அணி மாநில துணை செயலாளர் ஜி. மனோகரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் கார்த்திகேயன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ. செங்குட்டுவன், மகா.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி சந்தோஷ், மற்றும் பலர் உள்ளனர்.

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டம், கரூர் தொகுதியில் நடைபெற்ற, 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பயணத்தின் ஒரு பகுதியாக, கரூர் அண்ணாநகரில், கழகத்தின் மூத்த முன்னோடி புலவர் அருணா பொன்னுசாமி ஐயா அவர்களை, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

பெரம்பலூர் நகரம் முழுவதும்

முதல்வர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

நகர தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டத் தீர்மானம்!

பெரம்பலூர்,பிப்,26–

பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் நகர நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள்,BLA2,BDA, BLC, பல்வேறு சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் பெரம்பலூர் நகர 9ஆவது வார்டு செயலாளர் எம். மணிவாசகம் வரவேற்புரையில்,

பெரம்பலூர் நகர கழக செயலாளர் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், நகர கழக அவைத்தலைவர் ரெங்கராஜ் தலைமையில் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டனர் சிறப்புரையாற்றினார்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன்

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால்,

நகர கழக துணை செயலாளர் எம்.சபியுல்லா, நகர பொருளாளர் அசாரூதீன்,

மாவட்ட பிரதிநிதி அன்பழகன், ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ. அப்துல் கரீம், நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜீத்,

பெரம்பலூர் நகர கழக நிர்வாகிகள், பல்வேறு சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA BLC. கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், மார்ச்01, கழக தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

2026சட்டமன்ற தேர்தலுக்கு திருப்பு முனையாக,மார்ச் மாதம் 9ஆம் தேதியன்று திருச்சி அருகே, சிறுகனூரில் நடைபெறும் கழக மாநில மாநாட்டில் பெரம்பலூர் நகரத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அரியலூரில் அமுதழகு மாற்றுத்திறனாளிகள் நலச்சங்கம் சார்பில்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு விழா!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – பேராசிரியர் தோழர் தீபக்நாதன் பங்கேற்பு!

அரியலூர், பிப்,26–

அரியலூர் அன்னலட்சுமி ராஜ பாண்டியன் திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் நியாயமான முறையில் பிரதிநிதித்துவம் வழங்கி, அவர்களின் குரலுக்கு வலிமை சேர்த்த தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, அரியலூரில் அமுதழகு மாற்றுத்திறனாளிகள் நலச்சங்கம் சார்பில் பேராசிரியர் தோழர் தீபக்நாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு உரையாற்றியதாவது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி "மாற்றுத்திறனாளிகள் எனப் பெயரிட்டு பெருமை சேர்த்தாரோ, அதே வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமும் உரிமையும் வழங்கித் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டார், அதன் ஒரு சான்றாகவே, அரியலூர் நகராட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

அதன் பின்னர் உரையாற்றிய மாநில மாற்றுத்திறனாளிகள் நலச் சங்க செயலாளர், பேராசிரியர் தீபக்நாதன் பேசியதாவது :

"ஏழைச் சொல் அம்பலம் ஏறாது என்ற அந்தக் கூற்றை மாற்றி அமைத்து, அந்தப் பழமொழியைப் பொய்மொழியாக மாற்றிய பெருமை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஐயா மிகச்சாலச் சிறந்ததாக அது போற்றும். காரணம், மாற்றுத்திறனாளிகள் என்றாலே ஒரு இழிப்பார்வையோடு பார்க்கக்கூடிய அந்த காலத்தைக் கடந்து, அவர்களுக்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு அரசியல் பொறுப்பு வழங்கி, ஒவ்வொரு நகராட்சியிலும், உள்ளாட்சியிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதற்கான சட்டத் திருத்தத்தைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தானே மனமுவந்து, தானே முன்னின்று அதைச் சமர்ப்பித்து வரலாற்றின் போக்கை மாற்றியிருக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் . இது 14,000 மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சியில் பொறுப்புகளைக் கொண்டு வந்து கொடுக்கப் போகிறது என்பதைப் பார்க்கின்ற பொழுது, உள்ளபடியே புரட்சியைச் சத்தமில்லாமல் செய்த அற்புதமான தோழர், மாற்றுத்திறனாளி களுக்கான தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அமுதழகு மாற்றுத்திறனாளிகள் சங்கம், அரியலூர் சார்பில் ஒரு மாபெரும் பாராட்டு விழாவை இங்கே நடத்தி இருக்கிறோம்.

உள்ளபடியே உள்ளம் மகிழ்ச்சியோடு இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்களுக்கும் ஒரு சிறிய கோரிக்கை:

அரியலூர் மாவட்டத்திற்கும், மாற்றுத்திறனாளிகளுக்காக சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் தாழ்தளப் பேருந்தை (Low Floor Bus) அரியலூர் மாவட்டத்திற்கும் கொண்டு வர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய அன்பான கோரிக்கையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முன்வைத்திருக்கிறார்கள். நிச்சயம் தமிழ்நாடு முதலமைச்சர் இதில் கவனம் எடுத்து நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

எத்தனையோ விஷயங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய முதலமைச்சர், நம்முடைய அற்புதமான முதலமைச்சர், விடியல் பயணம் மாற்றுத்திறனாளிகளுக்கு உறுதி செய்திருக்கிறார். ஒன்று, கட்டமைப்பை உறுதி செய்திருக்கிறார்; பயணிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரச்சினைகளையும் உறுதி செய்திருக்கிறார்.

கொரோனா காலத்தில் வீட்டிற்கே வந்து தடுப்பூசி போட வேண்டும் என்ற திட்டத்தை இந்தியாவிற்கு முதன்முறையாகத் தமிழகம் அறிமுகம் செய்து, 'திராவிட மாடல்' ஆட்சிதான் முத்துவேல் கருணாநிதி அவர்கள்தான், இதுமட்டுமல்ல, 'தாயுமானவர் திட்டம்', சாதாரண ஏழை எளிய மக்களாக இருக்கக்கூடிய மூத்த குடிமக்கள் உட்பட, கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்குவதை ஒரு திட்டமாகக் கொண்டு வந்து, அன்புச் சோலையாக, கவிச்சோலையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை முழுக்க முழுக்க அன்புச் சோலையாக மாற்றி, சமூக நீதி மாடல் என்றால் என்ன என்பதை ஒட்டுமொத்த உலகத்திற்கும் காட்டியிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்றைக்குப் பாராட்டு விழா நடத்தி வருகிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இதயத்தின் ஆழத்திலிருந்து, கடைக்கோடி மாற்றுத்திறனாளியின் உள்ளத்திலிருந்து அவர்களுக்கு நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். யார் எங்களுக்கு உறுதுணையாகவும், அன்பாகவும் அரவணைத்துச் செல்கிறார்களோ அவர்களுடன்தான் மாற்றுத்திறனாளிகள் சமூகம் பயணிக்கும். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. 13 லட்சம் மாற்றுத்திறனாளிகளின் வாக்குகளும், அவர்களின் குடும்பத்தார் வாக்குகளும் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கொத்துக் கொத்தாகக் கிடைக்கும் என்பதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என மாநில மாற்றுத்திறனாளிகள் அணி செயலாளர் பேராசிரியர் தீபக்நாதன் பேசினார்.

நடைபெற்ற பாராட்டுவிழா கூட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம், இரத்தனபுரி பகுதி கழக பொறுப்பாளர் கோவை லோகு தலைமையில் 47 வது வட்ட கழக பொறுப்பாளர் செ.பூபாலன் ஏற்பாட்டில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 1,000 பள்ளி மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மத்திய மண்டலகுழுத் தலைவர் மீனா லோகு, பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி, மாமன்ற உறுப்பினர்கள் வைரமுருகன், ராஜபாண்டி, தனபால், துரை பிரவீன்குமார், மணிகண்டன், லாரா பிரேம்தேவ், பி.ஆறுமுகம், கே.விஸ்வநாதன், எஸ்.பாசகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையிலும், ஒன்றியச் செயலாளர்கள் என்.சேட்டு, குளவாய்ப்பட்டி சி.சண்முகம் ஆகியோர் வரவேற்புரையிலும் கலைஞர் திடல், அய்யப்பன் கோவில் அருகில், கீரனூரில் நடைபெற்ற "தமிழ்நாடு தலைகுனியாது" மாபெரும் பொதுக்கூட்டத்தில்தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிந்தி, கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், வழக்கறிஞர் மு.மணவழகன், த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், கீரை. தமிழ்ராஜா. எம்.பரமசிவம், வெ.முத்துகிருஷ்ணன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஆர்.சாமிநாதன், பி.அண்ணாத்துரை, த.செல்வம், ஆர்.செல்லத்துரை, மாலா இராஜேந்திரதுரை, கீரை. அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், சொ.தமிழினியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான கூட்டணி!

அன்னவாசலில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. பிப்-26-

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அன்னவாசல் பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை சார்பில் அம்ருத் 2.0 திட்டம் 2022-2023 கீழ் 10.32 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் மேம்பாட்டுப் பணியினை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

அப்போது இந்த நிகழ்ச்சிக்கு விராலிமலை அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சருமான சி விஜய பாஸ்கர் படத்துடன் நிகழ்ச்சி நடைபெறும் பகுதியின் நுழைவு வாயிலில் பதாகைகள் வைக்கப்பட்டிருந்த நிலையில் பதாகைகள் அப்புறப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்:

இந்த ஐந்தாண்டுகளில் வரலாற்று சிறப்புமிக்க சட்டமன்றமாக அமைந்துள்ளது பல்வேறு புதிய அறிவிப்பு தரப்பட்டுள்ளது.

இந்த சட்டமன்றம் தமிழ்நாடு மக்களுக்கு கிடைத்துள்ள வரப் பிரசாதம். ஏழை எளிய நடுத்தர மக்களுடைய பசிப்பிணி போக்குகின்ற அரசாக இந்த அரசு அமைந்துள்ளது.

காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து உலகிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிய சட்டமன்றம் தான் இந்த சட்டமன்றம். அடுக்கிக் கொண்டே போகக்கூடிய திட்டங்களை நிறைவேற்றியுள்ள ஒரே அரசு இந்த அரசு.

ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பேசியதை அறிகுறியாகவும் எடுத்துக் கொள்ளலாம் திமுகவுக்கு யார் வந்தாலும் வரவேற்பார்.

திராவிட மாடல் ஆட்சி என்பது எம்ஜிஆர் ஜெயலிதா பாணியில் சொல்ல வேண்டுமென்றால் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் ஆசி பெற்ற ஆட்சியாகவும் இந்த ஆட்சி உள்ளதாக ஓ.பி.எஸ். ஆதரவு எம்.எல்.ஏ., ஐயப்பன் சட்டமன்றத்திலேயே தெரிவித்துள்ளார். தி.மு.க. ஆட்சி அமைய எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் ஆசியும் உள்ளது என்று கூறியுள்ளனர்.

நயினார் நாகேந்திரன் ஆதாரப்பூர்வமாக குற்றச்சாட்டை கூறினார் என்றால் அவருக்கு பதில் சொல்ல நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். பொத்தாம் பொதுவாக ஒரு குற்றச்சாட்டை சொல்வது தவறு ஆதாரபூர்வமாக குற்றச்சாட்டை வைத்தால் அதற்கு பதில் நிச்சயம் இருக்கும். நாங்கள் எப்போதும் ஆதிதிராவிட மக்களுக்கு கொடுத்த நிதியை நாங்கள் எடுப்பதில்லை நாங்கள் கையில் இருக்கும் நிதியை தான் அந்த மக்களுக்கு கொடுக்கின்றோம். அந்த நிதியில் கை வைக்கின்ற ஆட்சி எங்கள் ஆட்சி இல்லை.

தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. சேர்ந்துள்ளதால் விஜயகாந்தின் ஆன்மா மன்னிக்காது என்பதை பா.ஜ.க.வினர் சொல்லக்கூடாது. விஜயகாந்தின் வாரிசுகள் சொல்ல வேண்டும். பா.ஜ.க. விஜய காந்தின் வாரிசு அல்ல. பா.ஜ.க. விஜயகாந்துக்கு எதுவும் செய்யவில்லை. 2016ல் விஜயகாந்த் இருக்கும் போது தே.மு.தி.க. தி.மு.க. வுக்கு வர வேண்டிய சூழல் இருந்தது ஆனால் அதை மடை மாற்றி விட்டார்கள் அதுதான் அன்றுள்ள நிலவரம்.

அதை இன்றைக்கு விஜயகாந்தின் மனைவி பிரேமலதா விஜயகாந்த் நிறைவேற்றி இருக்கிறார். நிச்சயமாக இந்த கூட்டணியை விஜயகாந்த் ஆத்மா கூட்டணியை வாழ்த்தும் வரவேற்கும் இது தமிழ்நாடு மக்களுக்கு தேவையான கூட்டணி.

எங்கள் கூட்டணியில் உள்ள யாருக்கும் நாங்கள் செக் வைக்க மாட்டோம். எங்களைப் பொறுத்த வரை எங்கள் கூட்டணியில் உள்ள அனைவரையும் அரவணைத்து இந்தியாவிலேயே முன்மாதிரியான கூட்டணி வைத்துள்ள தலைவர் எங்கள் தலைவர். எங்களை விட்டு யாரையும் பிரியவிடாமல் அனைவரையும் அரவணைத்து எல்லோருக்கும் ஒரே மாதிரியாக தோழமைக் கட்சிகள் என்று எண்ணி மரியாதை மதிப்பு தருகிற ஒரே அரசியல் தலைவர் தளபதி அவர்கள் தான்.

அமைச்சர் நேரு மீது வழக்குப்பதிவு குறித்து ஆர்.எஸ்.பாரதியே தெரிவித்துவிட்டார். தகவல் இல்லாமல் அவர் அதை கூறியிருக்க மாட்டார்.

நீதிமன்றம் சொல்வதற்கு முன்பு எங்களது தலைவர் தளபதி அவர்கள் யாராக இருந்தாலும் நான் எப்படி நடக்கக் கூடியவர். அவருக்கு தெரியும் எங்கள் அமைச்சர் எந்த தவறும் செய்திருக்க வாய்ப்பில்லை என்று. இருந்தாலும் நீதிமன்றம் வழக்கு போடப்பட்டுள்ள காரணத்தால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு வரும் பிரதமர் மோடி நல்ல திட்டங்களுடன் வந்தால் வரவேற்போம். இல்லையென்றால் என்ன செய்வது தமிழ்நாடு மக்களுடைய தலையெழுத்து.

எங்கள் கூட்டணி கூடுமே தவிர குறையாது. கூட்டணியில் உள்ளவர்களை கட் செய்து விட மாட்டோம்.

கூட்டணியில் உள்ளவர்களை தோழமையோடு தான் நடத்துவோம். எல்லாருக்கும்மான ஆட்சியாக தான் எங்கள் ஆட்சி இருக்கும்.

கூட்டணியில் அதிகமான கட்சிகள் இணைந்தாலும் அவர்களுக்குரிய இடங்களை வழங்குவதில் எங்கள் தலைவரின் சாணக்கியத்தனத்தை பார்ப்பீர்கள்.

விஜய் எங்களுக்கு ஒரு பொருட்டே கிடையாது மூன்றாவது இடத்தில் உள்ள ஆட்களைப் பற்றி எல்லாம் நாங்கள் பேசுவது கிடையாது. கூட்டணியில் கூடுதல் கட்சிகளை சேர்ப்பது எங்களுடைய தலைவரின் சாணக்கியத்தனம் ராஜதந்திரம். இந்திய அரசியலில் ஒரு சிறப்பாக காய்களை நகர்த்தி செல்லுகின்ற பெயரை வடமாநிலங்களில் உள்ள தலைவர்கள் இடத்திலும் பெற்றிருக்கிற ஒரு அரசியல் தலைவர் தமிழ்நாட்டில் இருக்கிறார் என்றால் அது தமிழ்நாடு முதலமைச்சர் தான். அவருக்குத்தான் அந்த பெருமை.

திமுக கூட்டணியில் புதிய கட்சிகள் சேர்வதால் திமுகவின் இலக்கு 200 என்பது கூடத்தான் செய்யும். குறையாது.

தேர்தலில் யார் வந்தாலும் அனைவரையும் சமமாக தான் பார்ப்போம். எங்களைப் பொருத்தவரை வெற்றிக்கோட்டை நெருங்கிக் கொண்டிருக்கிற ஒரு கூட்டணி எங்கள் கூட்டணி. நிச்சயமாக 200 இடங்களுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பல சர்வே முடிவுகள் இதை தெரிவித்து வருகிறது. அனைத்து சர்வேயிலுமே தி.மு.க.வுக்கு சாதகமாகத்தான் உள்ளது. இது தி.மு.க. ஆட்சிக்கு கிடைத்துள்ள சிறப்பு.

நாங்கள் சர்வேயை பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை எங்களது உழைப்பை தான் நாங்கள் பொருட்டாக எடுத்துக் கொள்கின்றோம். இருந்தாலும் சர்வேயை ஒரு டெஸ்ட் ஆக நாங்கள் பார்த்துள்ளோம்.

நாங்கள் ஐந்து ஆண்டுகள் இரவு பகலாக அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திமுகவின் மாவட்ட செயலாளர்கள் என அனைவரும் உழைத்து உள்ளோம். இந்த ஐந்தாண்டு காலத்தில் உள்ள உழைப்பை போல வேறு எந்த காலத்திலும் உழைக்கவில்லை.

இந்த தேர்தலுக்கு ஒவ்வொரு வாக்காளரையும் இரண்டு முறை, மூன்று முறை சந்தித்துள்ளோம். 1952 முதல் எந்த தேர்தலிலும் கிடையாது அப்படிப்பட்ட புதிய தேர்தல் அணுகுமுறையை உருவாக்கின்ற கூட்டணி தான் தி.மு.க. கூட்டணி.

இடைக்கால பட்ஜெட்டில் சலுகைகளை அளிப்பது கிடையாது. புதிய அறிவிப்புகள் அதனால் தான் தரவில்லை. வேண்டியளவு அள்ளித் தந்துள்ளோம்.

வெள்ளை அறிக்கை வெள்ளை அறிக்கை என்று எடப்பாடி பழனிச்சாமி கேட்டுக் கொண்டுதான் இருப்பார். அவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர் வெள்ளை அறிக்கை தான் கேட்க முடியும். நாங்கள் முக்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டோம் ஒரு சில சிறிய சிறிய வாக்குறுதிகள் நிறைவேற்றாமல் போய் இருக்கலாம். அனைத்தையும் ஒரே நேரத்தில் நிறைவேற்ற முடியாது அதையும் நிறைவேற்றுவோம்.

தகுதியுடைய ஒரு கோடியே 31 லட்சத்து 60 ஆயிரம் மகளிருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் மனைவிகள் மோட்டார் வாகனம் வைத்துள்ளார்கள். வசதி படைத்தவர்கள் அதில் இடம்பெறவில்லை. ஏனென்றால் அவர்கள் சொந்த வசதியிலேயே அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. தேவைப்பட்டால் அவர்களுக்கு ஏதாவது செய்ய யோசனை செய்வோம் என்று தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் தலைவர் – தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான மார்ச் 1 ம் தேதி கழக ஓட்டுனர் அணி சார்பில் தமிழகத்தில் எழுச்சியுடன் கொண்டாடுவது குறித்து. கழக ஓட்டுநர் அணியின் மாநில செயலாளர். கிருஷ்ணகிரி முன்னாள் மாவட்ட செயலாளர். டி.செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில துணை செயலாளர். சேலம் செல்லதுரை. அமைப்பாளர். ஸ்ரீதுர் நெய்வேலி தங்கம். உட்பட மாநில மாவட்ட . மாநகர அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.